1986 நவம்பர் 14]

5. கவன ஈர்ப்பு.

குவாரிகள் ஏலம் விடப்படும் தொகையை ஊராட்சிகளுக்கு அளித்தல்

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மாநிலம் முழுவதும் குவாரிகள் ஏலம் விடப்படும் தொகையில் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய பங்கு நிதி, கனிம வளத்துறை ஆணையில்லாத காரணத்தால், கடந்த சுமார் 15 ஆண்டுகளாக ஊராட்சி நிதியில் சேர்க்காததால் ஊராட்சிகளுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்—

அறிக்கை.

குவாரிகள் ஏலம் விடப்படும் தொகை 5–10–1963 நாளிட்ட தொழில், தொழிலாளர் நலன் மற்றும் கூட்டுறவுத் துறை ஆணை எண் 4817-ன் படி குவாரி எந்த ஊராட்சியில் உள்ளதோ அவ்வூராட்சிக்கு 50 விழுக்காடும், அவ்வூராட்சி சேர்ந்துள்ள ஊராட்சி ஒன்றியத்திற்கு 50 விழுக்காடும் பகிர்வு செய்யப்படும். அதன்பின், 1974–75 ஆம் ஆண்டு மதிப்பீட்டுக் குழு தனது பரிந்துரை 11-ல், குவாரிகளின் மூலம் வரும் வருவாய் அனைத்தும் ஒன்றாகச் சேர்த்து மாநில பொது நிதியில் முதலில் சேர்க்கவும், அதன் பின் ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தின் பரப்பளவு, மக்கட் தொகை, சமூக மற்றும் பொருளாதார நிலை அடிப்படையில் அனைத்து ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் மறு பகிர்வு செய்திடல் வேண்டும் என்ற பரிந்துரைக்கிணங்க அரசு அவ்வாறே 11–7–1980-ஆம் நாளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசாணை எண் (நிலை) 1054-ன் மூலம் ஆணையிட்டது.

தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் பதவி ஏற்றபின் குவாரி மூலம் வரும் வருவாயை முன்பிருந்தது போல 50 விழுக்காடு குவாரி எந்த ஊராட்சியில் உள்ளதோ அவ்வூராட்சிக்கும், அவ்வூராட்சி சேர்ந்துள்ள ஊராட்சி ஒன்றியத்திற்கு 50 விழுக்

(திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி) [1986 நவம்பர் 14

காடும் பகிர்ந்தளிக்கும் முறையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளனர். இச் செயற்குறிப்பு அரசின் தீவிர ஆய்வில் உள்ளது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் குவாரி எந்த ஊராட்சியில் உள்ளதோ அவ்வூராட்சிக்கு 50 விழுக்காடும், அவ்வூராட்சி சேர்ந்துள்ள ஊராட்சி ஒன்றியத்திற்கு 50 விழுக்காடும் அந்தக் குவாரியினால் வரும் வருவாய் பகிர்ந்தளிக்கப்படும் என்று ஆணையிடப்பட்டிருக்கிறது என்று விவரம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் கடந்த 10, 15 ஆண்டுகளாகவே எந்த ஊராட்சிக்கும், ஊராட்சி ஒன்றியத்திற்கும் அது வரவு வைக்கப்படாத சூழ்நிலை இருந்து வருகிறது. அவ்வாறு எவ்வளவு ரூபாய் ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வரவில் வைக்கப்படாமல் இருக்கிறது என்ற விவரம் இருந்தால் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அதுபற்றிய விவரம் தற்போது என்னிடம் இல்லை. என்றாலும் இது குறித்து துரிதமான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் பேரவைத் துணைத் தலைவர் : பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது என்ற விவரங்கள் விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் சாதாரணமாக நடைமுறையில் கிராமங்களில் உள்ள குவாரிகளைப் பொறுத்தவரையில் வருவாய்த் துறை அதிகாரிகள்தான் அவற்றை ஏலம் விடுகிறார்கள். இதன் காரணமாக அந்தத் தொகை முதலில் வருவாய் துறையில் செலுத்தப்படுகிறது. வருவாய்த் துறையிலிருந்து ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தொகையைப் பிரித்துக் கொடுக்கப்பட வேணடுமென்றால் அந்தப் பணம் தற்போது கனிம வளத் துறையில் டெப்பாசிட் செய்யப்படுவதால் அதற்கான ஆணை கனிம வளத் துறையின் ஆணையிருந்தால்தான் முடியும். எனவே உள்ளாட்சித் துறையும் கனிம வளத்துறையும் சேர்ந்து இதற்குரிய ஆணையை விரைவில் வெளியிடுவதற்குக் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30.)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.